Arr F. C. Silvester, 1901

Londonderry Air
11.10.11.10.D



பாமாலை 269-மனு சுதா எம் வீரா

1. மனு சுதா, எம் வீரா, வல்ல அன்பா!
உம் தொண்டரே இப்பாரில் தீரராம்;
எம் இன்பம் துன்பம் சகிக்கும் மா நண்பா!
உமக்கு நாங்கள் ஜீவ பலியாம்.

2. மா கஷ்ட பாதை சென்றீர் தேவரீரே,
சத்திய வார்த்தை நீர் அருளினீர்;
அன்போடு காட்டுப் புஷ்பம் வியந்தீரே,
வாலிபர் வீரம் கண்டே மகிழ்ந்தீர்.

3. பாலியர் போதகா, இளைஞர் நேசா!
மாந்தரின் வேந்தர் ஊழியனும் நீர்;
நம்பிக்கை ஆறுதல் இன்பத்தின் நாதா!
எம் நோக்கம் இன்பம் பயம் ஆளுவீர்.

4. ஆறுதல் ஈயும் அன்பரை அண்டுவோம்,
எம்மோடிரும் எம் தோல்வி துன்பிலும்;
செல்வர் விருந்தா! இன்பத்தில் வேண்டுவோம்!
இல்லார் நல் தோழா, தாழ்வில் தங்கிடும்.